27th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மற்றைய மாநில விகிதாச்சாரம் எப்படி இருக்கிறது என்பது தெரியவில்லை. ஒன்று மட்டும் கூறுவேன். மற்ற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் செம்மையாக வைத்திருக்கிறோம். பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், செம்மையாக இருக்கிறது. 6 முதல் 11 வயது வரை கட்டாயக் கல்வி என்ற கொள்கையை நாட்டின் விடுதலைக்குப் பிறகு ஏற்றதும் படிப்படியாக முயற்சித்து இப்போது 94 சதம் மாணவர்களைக் கற்பிக்கிறோம். வேறு மாநிலங்களில் அவ்வளவு இல்லை. நம் விகிதாசார முறை, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் முறை ஆகியவற்றை மற்றவர்கள் பாராட்டுகிற அளவுக்கு நடத்துகிறோம். எப்படி நடத்துகிறீர்கள் என்று மற்றவர்கள் கேட்பதி லிருந்து பூரிப்பு அடையலாம், இதையொட்டி தற்போது திருப்தியடைய வேண்டுமென்று சொல்லவில்லை. மேற்கொண்டும் முயற்சி எடுப்போம்.

Medical College, Madurai

a*33. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) whether it is a fact that the Madurai Medical College hostel students suffered without water for bathing during July and August 1968 ;

(*b*) whether it is a fact that a letter has appeared in the 'Letters to the Editor' column of the 'Hindu' in this regard ;

(*c*) if so, whether the attention of the Government was drawn to that letter ; and

(*d*) if so, the action taken thereon ?-

மதுரை மருத்துவக் கல்லூரி

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரி விடுதியில் 1968 ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மாணவர்கள் குளிக்கத் தண்ணீர் இல்லாமல் அவதியுற்றனர் என்பது உண்மையா?

(இ) இது பற்றி "ஹிந்து" ஆங்கிலம் நாளிதழில் "ஆசியரியருக்குக் கடிதம்" என்ற தலைப்பில் குறையைத் தெரிவிக்கும் கடிதம் வந்தது சரியா?

(உ) ஆமெனில், இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(எ) அதன் மேல், எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தகவல் இல்லை.

(உ) அண்டு (எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Chingleput Medical College, Hospital

a* 34. *Q.*—THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the reasons for the dearth of patients in the Chingleput Medical College Hospital ?

---

a.—Postponed from the list of questions for 23rd January 1970.